1986 மே 14]

புகார் செய்யப்பட்டால், அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்கள். கடுமையான நடவடிக்கை எடுப்பது என்பது கடினம். காரணம், இலட்சக்கணக்கான வண்டிகள் இயங்கிக் கொண்டிருக்கிறபோது ஒவ்வொரு இடத்திலேயும் பார்த்து நடவடிக்கை எடுப்பது என்பது கடினம். எங்கே இந்தப் பிரச்சினை வருகிறதோ, அப்போது சம்பந்தப்பட்ட ஓட்டுநர் பக்கத்திலே இருக்கிற காவல்நிலையத்திலே சொல்லிவிட்டால் அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் தற்காலிகப் பணியாளர்கள்.

655—(*வினா எண். 7612) **திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் குழித்துறை கிளையில் தினக்கூலிகளாக எத்தனை ஓட்டுநர்களும், எத்தனை நடத்துனர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்?

(ஆ) இக்கிளையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணிகளில் நிரந்தரப்பணி பணியிடங்கள் எத்தனை காலியாக உள்ளன?

(இ) தினக்கூலிகளாகப் பணியாற்றுபவர்களை சீனியாரிட்டி அடிப்படையில் காலியாக உள்ள நிரந்தரப் பணியிடங்களில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 23 ஓட்டுநர்களும் 23 நடத்துனர்களும் தினக்கூலி அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(ஆ) தற்பொழுது குழித்துறை பணிமனையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணிகளில் நிரந்தர பணியிடங்கள் காலியாக இல்லை.

(இ) தினக்கூலி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்ட பணியாளர்கள், ஓராண்டுக்குள் 240 நாட்கள் பணி முடித்த உடனே, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லாதிருந்தால், மாதாந்திர ஊழியர்களாக பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே தொழிலாளிகளை நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு 7.5 சதவிகிதம் என்ற முறையில் உள்ள 'நார்ம்ஸ்' இப்போது முழுமையாக பல கழகங்

களிலே கடைப்பிடிக்கப்படவில்லை. நேசமணி போக்குவரத்துக் கழகத்தில், குழித்துறை பணிமனையில் மற்றும் மற்ற பணிமனைகளிலேயும் அப்படி 7.5 சதவிகிதம் என்ற முறையில் பணியாளர்கள் அமர்த்தப்படவில்லை என்பதும், அதே போன்று தேவையான அளவுக்கு ஓட்டுநர்கள், நடத்துநர்கள் அமர்த்தப்படவில்லை என்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அமைச்சர் அவர்கள், ஓராண்டு பூர்த்தியானவர்களை நிரந்தரப்படுத்தப்பட்டதாக சொல்கிறார்கள். ஆனால் ராஜதுரை என்ற டிரைவர் 1984-லே இருந்து 85 வரை 9 முறைகள் சி. எல். ஆர். ஆக வேலைக்கு அமர்த்தப்பட்டார். அவர் நிரந்தரப்படுத்தப்படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சட்டப்படி செய்ய வேண்டிய 7.5 சதவிகிதம் அவர்களை வைத்து இருக்கிறார்கள் என்று எனக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் இருக்குமேயானால், அதை நிரூபிக்கின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கொடுப்பார்களேயானால், அதைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கலாம். ஏன் அப்படி வைத்திருந்தார்கள் என்று கேள்வியைக் கூட கேட்டு நடவடிக்கை எடுக்கலாம். ராஜதுரையைப் பற்றிச் சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்னது போல், ஓராண்டிற்குள்ளாக 240 நாட்கள் தொடர்ந்து பணியை முடித்து இருந்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். இரண்டாவது, அவர்கள் மீது அந்தக் காலத்தில் எந்த ஒழுங்கு நடவடிக்கையும் இருக்கக் கூடாது. தவறு செய்திருந்தால் அவர்களையும் நிரந்தரம் ஆக்க வேண்டும் என்று கேட்பது நியாயமாக இருக்காது. ராஜதுரை மீது ஏதாவது தவறு இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குழித்துறை பணிமனையில் எத்தனை பேருந்துகள் இருக்கின்றன ? மொத்தமாக எத்தனை டிரைவர்கள், எத்தனை கண்டக்டர்கள் அங்கே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கு 202 ஓட்டுநர்களும், 201 நடத்துநர்களும் இருக்கிறார்கள். அதிலே தினக் கூலியாகச் சொன்னதில் 23, 23 என்று சொல்லி இருக்கிறேன். வண்டிகள் எத்தனை என்ற கணக்கு தெரியவில்லை. பழைய கணக்குப்படி, 90 இருந்ததாக ஞாபகம் இருக்கிறது. ஆனால் இதிலே குறிப்பு கொடுக்கப்படவில்லை.